**உங்களுடைய அந்தரங்கத் தன்மை பாதுகாக்கப்படுவதற்காக உங்களுக்குள்ள உரிமை:**

MIC-இல் ‘முதியோர் பராமரிப்பு வழிநடத்து சேவை’ (Aged Care Navigation service)யினை நீங்கள் துவங்கும் பொழுது உங்களைப் பற்றியும் நீங்கள் பயன்படுத்தும் சேவையைப் பற்றியுமான தகவல்களை நாங்கள் இருப்பில் வைத்துக்கொள்வதற்காக உங்களுடைய சம்மதத்தினை எமக்கு அளிக்குமாறு நாங்கள் உங்களைக் கேட்போம். இந்தத் தகவல்கள் தனிப்பட்ட முறையிலும், பாதுகாப்பாகவும் வைக்கப்படும். உங்களுடன் பணியாற்றும் ஊழியர்களால் மட்டுமே இவற்றைப் பார்க்க இயலும். மேற்கொண்டு இந்தத் தகவல்கள் தேவைப்படாத பொழுது, சட்ட வழிகாட்டுகளைப் பயன்படுத்தி இவை அழிக்கப்பட்டுவிடும். ஒரு சேவைக்காகப் பணியாளர்கள் உங்களைப் பரிந்துரைக்கும் பொழுது, அல்லது உங்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் அல்லது நண்பர்களுடன் உங்களுடைய சூழ்நிலையைப் பற்றிக் கலந்துபேசும் பொழுது சம்மதம் அளிக்குமாறு உங்களிடம் கேட்கப்படும்.

‘MIC தகவல் பாதுகாப்புக் கொள்கை’யைப் பற்றிய முழு பிரதி ஒன்று எமது வலைத்தலத்தில் கிடைக்கும்

**‘முதியோர் பராமரிப்பு வழி நடத்துத் திட்டம்’ (Aged Care Navigation program) ஒருவருக்கு ஏற்றதாக இல்லை என்றால் என்ன ஆகும்?**

இந்தத் தீவிரப் பராமரிப்பு என்பது ஒவ்வொருவருக்கும் தேவைப்படாது. மற்ற ஆதரவுதவிகள் மற்றும் அவற்றிற்கான தொடர்பு விபரங்கள் ஆகியன கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- My Aged Care - 1800 200 422
- Services Australia - 1800 227 475
- OPAN Advocacy support - 1800 700 600
- Carer Gateway - 1800 422 737
- National Dementia Helpline - 1800 100 500

**மேலதிகத் தகவல்களுக்கு, தயவு செய்து பின்வருவோருடன் தொடர்புகொள்ளுங்கள்:**

## Migrant Information Centre (Eastern Melbourne) (MIC)

**‘புலம் பெயர்ந்தோர் தகவல் மையம்’ (கிழக்கு மெல்பர்ன்)**

☎ **தொலைபேசி:** (03) 9275 6906

🖷 **தொலைநகல்:** (03) 9285 4882

**முகவரி / * தபால்:**
Suite 2, 27 Bank Street, Box Hill VIC 3128

**மின்னஞ்சல்:**
carefinder@miceastmelb.com.au

**வலைத்தலம்:**
www.miceastmelb.com.au

மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவையெனில், இலவச மொழிபெயர்த்துரைப்பு உதவியை இந்த சேவையினால் ஏற்பாடு செய்ய இயலும்

*நாம் பணியாற்றும் ‘குலின்’ தேச ‘வுருஞ்செரி’ மக்களது நிலத்தின் பாரம்பரிய உரிமையாளர்களையும் மற்றும் பாதுகாவலர்களையும் MIC சேவை அங்கீகரித்து ஏற்கிறது. கடந்த காலத்திய, நிகழ் காலத்திய மற்றும் உதயமாகிவரும் மூத்த பழங்குடியினருக்கு எமது மரியாதைகளை நாம் செலுத்துகிறோம்.*

*அனைத்துப் பின்புலங்களையும், பாலினங்களையும், பாலியல் தன்மைகளையும், கலாசாரங்களையும், சரீரங்களையும், இயலுமைகளையும் சார்ந்த மக்களை MIC சேவையானது மதித்து உள்ளடக்குகிறது.*

MIGRANT INFORMATION CENTRE
eastern melbourne

A.B.N. 27 084 251 669

# Aged Care Navigation
# ‘முதியோர் பராமரிப்பு வழிநடத்தல்’





**முதியோர் பராமரிப்பு சேவைகளை விளங்கிக்கொள்ளவும், அவற்றிற்காக விண்ணப்பிக்கவும், அவற்றுடன் ஈடுபாடு கொள்ளவும் பல்வேறுபட்ட பின்புலங்களையும், சமூகங்களையும் சேர்ந்த வயதில் மூத்தவர்களுக்கு உதவுவதற்கானதொரு இலவச சேவை**

*Tamil*

## MIC-யினது 'முதியோர் பராமரிப்பு வழிநடத்தல்' (Aged Care Navigation) என்பது யாது?

முதியோர் பராமரிப்பு முறைமை என்பது பல முதியோர்களுக்கு மிகவும் சிக்கல் வாய்ந்ததாக இருக்கலாம். மொழித் திறன்கள் அல்லது தொழில் நுட்பத் திறன்கள் இல்லாமை, அல்லது இந்த சேவை முறைமைகளில் உள்ள பரிச்சயம் ஆகியன அவர்களுக்குத் தேவைப்படும் சேவைகளை அணுகுவதை ஏற்றதாழ இயலாத காரியமாக ஆக்கும். ஆதரவுதவி சேவைகளுடன் தொடர்புபடுத்தப்படாதவர்கள் அல்லது தாம் விரும்பும் விதத்தில் சேவைகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புபவர்களுக்கு இந்தத் திட்டத்தினால் உதவ இயலும். கலாசார ரீதியாகவும், மொழி ரீதியாகவும் பரந்துபட்ட (CALD) பின்புலங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஆதரவுதவி அளிப்பதில் MIC கவனக்குவிவு செய்கிறது.

## யார் தகுதி பெறுவர்?

இந்தத் திட்டத்தின் மூலமான ஆதரவுதவியைப் பெறுவதற்கான தகுதியைப் பெற ஒருவர் கட்டாயமாக:

- ☑ 65 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும்
- ☑ 'மேனிங்ஹாம்', மொனாஷ் அல்லது 'வைட்ஹார்ஸ்' நகரங்களில் வசிப்பவராக இருக்கவேண்டும்
- ☑ கலாசார ரீதியாகவும், மொழி ரீதியாகவும் பரந்துபட்ட CALD பின்புலங்களைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்
- ☑ அவர்களுக்கு உதவக் கூடிய பராமரிப்பாளர் அல்லது ஆதரவுதவி நபர் யாரும் இல்லாமல் இருக்கவேண்டும், அல்லது
- ☑ தமக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கைக்குப் பாத்திரமான பராமரிப்பாளர் அல்லது ஆதரவுதவி நபர் ஒருவர் இல்லாமலிருக்க வேண்டும்.

கூடுதலாக, உதவி தேவைப்படுவதற்கான பின் வரும் காரணங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்:

- ☑ மொழித்திறன் அல்லது எண்ணறிவுப் பிரச்சினைகளின் காரணமாகத் தொடர்பாடல் கொள்வதில் சிரமம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
- ☑ தகவல்களை விளங்கிக்கொள்வதிலும், முடிவுகளை மேற்கொள்வதிலும் சிரமம் உள்ளவராக இருக்கவேண்டும்
- ☑ முதியோர் பராமரிப்பு சேவைகள் அல்லது அரசாங்கத்துடன் ஈடுபாடு கொள்வதில் தயக்கம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
- ☑ இந்த சேவைகளை அவர்கள் பெறவில்லை என்றால், பாதுகாப்பற்ற சூழலில் உள்ளவராக இருத்தல் வேண்டும்

## 'முதியோர் பராமரிப்பு வழிநடத்தல் திட்டம்' (Aged Care Navigation program) எவ்வாறு செயலாற்றுகிறது?

உங்களுக்கோ, நீங்கள் பராமரித்துவரும் நபருக்கோ இது ஏற்ற சரியான சேவை என்றால், தயவு செய்து எம்முடன் தொடர்புகொள்ளுங்கள். தேவைப்படின், உங்களுடன் பேசுவதற்காக இலவச மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை எம்மால் ஏற்பாடு செய்ய இயலும்.

நீங்கள் சந்திக்க விரும்பினால், எமது பணியாளர்கள் உங்களுடைய இல்லத்திற்கு, அல்லது நீங்கள் விரும்பும் இன்னொரு இடத்திற்கு வந்து உங்களைச் சந்திப்பார்கள். உங்களுடைய சூழ்நிலையையும், உங்களுக்கு முக்கியமானது என்ன என்பதையும், நீங்கள் சாதிக்க விரும்புவது என்ன என்பதையும் விளங்கிக்கொள்வதற்காக நாங்கள் கேள்விகள் கேட்போம். கிடைக்கும் முதியோர் பராமரிப்பு சேவைகள் யாவை என்பதையும், உங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவைகளைக் கண்டறியவும், அவற்றைத் தெரிவு செய்யவும் விளங்கிக்கொள்ள எம்மால் உங்களுக்கு உதவ இயலும்.

## நாம் ஆற்றும் பணிகளில் பின் வருவன உள்ளடங்கலாம்:

- ☑ சேவை ஒன்றிற்காக விண்ணப்பிப்பதில் அடங்கியுள்ள படி நிலைகளையும், சேவைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் விளங்கிக்கொள்ள உங்களுக்கு உதவுதல்
- ☑ 'என் முதியோர் பராமரிப்பு சேவை' (My Aged Care) யுடன் தொடர்புகொள்தல், அத்துடன் பதிவு செய்தல் மற்றும் சோதனைச் செயல்பாட்டு முறைகள் ஆகியவற்றின் ஊடாக வழி நடத்துதல்
- ☑ மதிப்பீடு ஒன்றையும், சந்திப்புவேளைகளையும் ஏற்பாடு செய்தல்
- ☑ மதிப்பீட்டின் பொழுது சமூகமாதல் மற்றும் ஆதரவி அளித்தல்
- ☑ நீங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள முதியோர் பராமரிப்பு சேவை வழங்குநர்களைக் கண்டறிதல் மற்றும் அந்த சேவைகளின் கிடைப்பைச் சோதித்துத் தெரிந்துகொள்ளல்
- ☑ படிவங்களைப் பூர்த்தி செய்தல், அத்துடன் சேவைக்கான ஏற்பாடுகளை விளங்கிக்கொள்வதில் ஒத்தாசையளித்தல்
- ☑ வருமானம் மற்றும் சீவன வழி-வகைச் சோதனைகளைக் கண்டறிதல்
- ☑ சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவை துவங்கியவுடன் அனைத்தும் சரியாக உள்ளனவா என்று சோதித்தல்
- ☑ மற்ற சவால்களுக்குத் தீர்வு காணல், மற்றும் சுகாதாரம், மன நலம், வீட்டு வசதி, போதை மருந்து மற்றும் மதுபானம் சம்பந்தப்பட்ட சேவைகள் மற்றும் சமூக குழுக்கள் போன்ற சமூகத்திலுள்ள ஆதரவுதவி சேவைகளுடன் தொடர்புபடுத்துதல்

## 'முதியோர் பராமரிப்பு வழிநடத்தல்' (Aged Care Navigation) சேவைகள் என்பன இலவசம் மற்றும் இரகசியமானவை ஆகும்